**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-10** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திக் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 17th day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

எதிரிகள் தரப்பு வேண்டுகோளின்படி**,** எதிரிகள் அவர்கள் விருப்பப்படி வரிசை மாறி அமர வைக்கப்பட்டுள்ளனர்**.**

<u>முதல் விசாரணை</u>

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, கூலி வேலை செய்கிறேன். கடந்த 17.09.2019 அன்று இரவு சுமார் 10.00 – 11.00 மணியளவில் குணசேகரனின் இளநீர் கடை பூட்டப்பட்டு இருக்கிறதா என பார்ப்பதற்காக நானும், எனது ஊரைச்சேர்ந்த குணசேகரன் மகன் பிரவீன் குமார் என்பவரும் சென்றுவிட்டு, இரவு 10.30 – 11.00 மணியளவில் …..

அண்ணாநகர், கறிக்கடை சந்து வழியாக வண்டியில் வந்துக்கொண்டிருந்தோம். அப்போது கும்பலாக சண்டையாக இருந்தது. வண்டியை மெதுவாக ஓட்டி வந்தோம். அங்கு சண்டை போட்டுக்கொண்டிருந்த பசங்களில் பிரேம்குமார், கோகுல், பாண்டி, மணிகண்டன் உள்ளிட்ட நிறைய பேர் நின்றுக்கொண்டிருந்தார்கள். அப்போது கிருஷ்ணமூர்த்தி என்னை அடித்துவிட்டான், அவனை காலையில் அடித்துக் கொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியை பற்றித்தான் பேசினார்கள் என்று எங்களுக்கு தெரியாது. மறுநாள் நான் வீட்டிலிருந்தபோது, பிரவீன் எனக்கு போன் செய்து, அவரது அண்ணனை வெட்டிவிட்டார்கள் என கூறினார். அதன்பிறகு நான் அப்பல்லோ மருத்துவமனை சென்றேன். போலீசார் இதுசம்மந்தமாக என்னை விசாரித்தனர். பிரேம்குமார், கோகுல், பாண்டி, மணிகண்டன் ஆகியோர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர்களில் பிரேம்குமார் நீதிமன்ற ஆஜரில் இல்லை. மற்றவர்கள் உள்ளனர். நீதிமன்ற ஆஜர் வரிசையில் இடமிருந்து நான்காவதாக உள்ளவர் கோகுல். 7 வதாக மஞ்சள் சட்டை அணிந்திருப்பவர் பெயர் பாண்டி. இடமிருந்து இரண்டாவதாக உள்ளவர் பெயர் தமிழ். முதலில் அமர்ந்திருப்பவர் பெயர் அஜீத். இடமிருந்து வலமாக 6 வதாக உள்ளவர் பெயர் கேசவன். இடமிருந்து ஒன்பதாவதாக அமர்ந்திருக்கும் ஊதா சட்டை அமர்ந்திருப்பவர் பெயர் விஷ்ணு. அவருக்கு அடுத்து இருப்பவர் அரவிந்த். அவருக்கு அடுத்து மணிகண்டன். மேற்சொன்ன நபர்கள் அன்றைய தினம் நின்றுக்கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரிகளில் கண்ணாடி அணிந்திருப்பவர் பெயர் செந்தில். அவரும் அன்று அங்கு நின்றுக்கொண்டிருந்தார். எதிரிகள் வரிசையில் 8 வதாக இருப்பவர் அரவிந்த். அவரும் அன்றைய தினம் அங்கு நின்றுக்கொண்டிருந்தார். (நீதிமன்றத்தில் இடமிருந்து வலமாக *1* வதாக இருப்பவர் *7* வது எதிரி அஜீத்*, 2* வதாக இருப்பவர் *8* ம் எதிரி தமிழரசன்*, 3* வதாக இருப்பவர் *10* ம் எதிரி செந்தில் *(எ)* செந்திலீஸ்வரன்*, 4* வதாக இருப்பவர் *1* ம் எதிரி கோகுலகிருஷ்ணன்*, 6* வதாக இருப்பவர் *6* வது எதிரி கேசவன்*, 7* வதாக இருப்பவர் *2* ம் எதிரி துரைப்பாண்டி*, 8* வதாக இருப்பவர் *11* ம் எதிரி கலைச்செல்வன்*, 9* வதாக இருப்பவர் *12* ம் எதிரி விமல் பசீர்*, 10* வதாக இருப்பவர் *7* ம் எதிரி அரவிந்த்*, 11* வதாக இருப்பவர் *4* ம் எதிரி மணிகண்டன் *(எ)* ஆர்.எஸ்.மணி*)* இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

குணசேகரன் கடையை தினமும் சென்று பார்க்கும் வழக்கம் உண்டா என்றால் அடிக்கடி சென்று பார்ப்பேன். அவரது கடை பிளாட்பாரத்தில் உள்ளது. அந்த கடைக்கு கதவு, பூட்டு எதுவும் கிடையாது. படுதா போட்டு, கயிறு போட்டு கட்டியிருப்பார்கள். அந்த கடைக்க நான் முதலீடு செய்யவில்லை. கொரோனா காலக்கட்டத்தில் நான் வேலை இல்லாமல் வீட்டில் இருந்தேன். கொரோனா காலத்தில் எப்போது முழுஅடைப்பு இருந்தது என்றும், எப்போது தளர்வு இருந்து என்றும் எனக்கு தெரியாது என்றால் அந்த சமயத்தில் தளர்வு இருந்தது. தளர்வு காலங்களில் இரவு 9.00 மணிக்கு மேல் யாரும் வெளியே வரக்கூடாது என உத்தரவு இருந்தது. அத்தியாவசிய காரணங்களை தவிர வேறு காரணங்களுக்கு வெளியே நடமாடக்கூடாது என உத்தரவு இருந்தது. அந்த சமயத்தில் என் வசம் செல்போன் இருந்தது. கூட்டமாக நின்று யார் பேசிக்கொண்டிருந்தவர்களின் பெயர் மற்றும் ஆட்கள் தெரியும். கிருஷ்ணமூர்த்தி என்பவர் என்னுடன் வந்த பிரவீனின் அண்ணன். என் வீட்டிலிருந்து ஐந்தாறு வீடுகள் தள்ளி கிருஷ்ணமூர்த்தி வீடு உள்ளது. அவர் எனக்கு சொந்தம். பிரவீன் அப்பா, அம்மா ஆகியோருடன் நான் நன்கு பழகுவேன். எதிரிகள் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருந்த இடம் கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கு பக்கத்து ஊரில் உள்ளது. இளநீர் கடைக்கு செல்லும் வழியில் உள்ளது. என் செல்போன் மூலமாக காவல்நிலையத்திற்கு, கூட்டமாக நின்று கொலை செய்வதாக பேசிக்கொண்டிருக்கிறார்கள் என நான் கூறவில்லை. பொங்கல் சமயத்தில் ஏற்பட்ட பிரச்சினை பற்றி எனக்கு தெரியாது. பொங்கல் பிரச்சினை குறித்து என்னிடம் யாரும் கூறவில்லை. கிருஷ்ணமூர்த்தி வீட்டை கடந்துதான் என் வீட்டிற்கு செல்ல வேண்டும். கிருஷ்ணமூர்த்தி என்ற பெயர் அடிப்பட்டவுடன் கிருஷ்ணமூர்த்தி வீட்டில் அதுபற்றி நான் கூறவில்லை என்றால் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என்று தெரியாததால் நான் கூறவில்லை. நான் சொன்ன தேதியில் முழு அடைப்பு இருந்த காரணத்தினால் கடை எதுவும் வைக்கவில்லை என்றும், கடை பூட்டப்பட்டிருக்கிறதா என சென்று பார்க்க வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கு சாட்சி வேண்டும் என்பதற்காக இறந்த கிருஷ்ணமூர்த்தியின் உறவினராக என்னை ஒரு சாட்சியாக தயாரித்து, சாட்சியம் அளிக்க வைத்துள்ளனர் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன தேதியில், சொன்ன இரவு நேரத்தில், எதிரிகள் யாரும் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருக்கவில்லை என்றும், அதனால்தான் நான் என்னிடமிருந்த செல்போன் மூலம் போலீசாருக்கு தகவல் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**2, 6, 8, 9** மற்றும் **12** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மறுநாள் 18.09.2020 அன்று நான் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது போலீசார் அங்கிருந்தனர். அப்போது பிரவீன்குமாரும் இருந்தார். அப்போது முதல்நாள் நடந்த சம்பவத்தை நானும், பிரவீன்குமாரும் போலீசாரிடம் சொன்னோம். அதை போலீசார் பதிவு செய்துக்கொண்டனர். போலீசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் கேசவன், விமல்பசீர் ஆகியோரும் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்தனர் என கூறினேன். நானும், பிரவீனும் கறிக்கடை சந்து வழியாக வண்டியில் சென்றோம் என போலீசாரிடம் கூறியுள்ளேன். போலீசார் விசாரணையில், கூட்டமாக நின்றுக்கொண்டிருந்தார்கள், சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னேன். போலீசார் விசாரணையில், எதிரிகள் பேசிக்கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி யாரென்று அப்போது தெரியாது என சொல்லியுள்ளேன். இளநீர் கடையிலிருந்து சின்னாண்டாங்கோவில் செல்வதற்கு அண்ணாநகர் வழியாக செல்வதற்கு வழி கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு எதிரிகள் யாரையும் தெரியாது என்றால் சரியல்ல. எதிரி அஜீத் என்பவர் அன்றைய தினம் இரவில் கால்டேக்சி டிரைவராக டிரிப்பில் இருந்தார் என்றால் சரியல்ல. எதிரி தமிழரசன் என்பவர் நான் பார்த்த சமயத்தில் கரூரில் இருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ள அவரது சொந்த ஊரில் இருந்தார் என்றால் சரியல்ல. பிரேம்குமார் அந்த பகுதியை சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான். துரைப்பாண்டி கரூர், அண்ணா நகர் பகுதியை சேர்ந்தவர் இல்லை. கரூரை சேர்ந்தவர். சம்பவ சமயத்தில் இரவு நேரத்தில் போலீசார் செக்போஸ்ட் போட்டு, கண்காணிப்பில் இருந்தார்கள். கண்காணிப்பு பணியில் இருந்த காவலர்களிடமும் எதிரிகள் கிருஷ்ணமூர்த்தியை கொல்ல வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில் எதிரிகள் யாரும் அங்கில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவர் எனக்கு உறவினர் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த விசாரணையின்போது நான் நீதிமன்றத்திற்கு வந்தேன். என் அப்பா பெயர் தவறுதலாக உள்ளது என திரும்ப சென்றுவிட்டேன். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், பொய் சாட்சியம் அளிக்க மாட்டேன் எனவும் நான் மறுத்து நான் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் என் உறவினர் என்பதாலும், போலீசாரின் கட்டாயத்தின்பேரிலும் இன்றைய தினம் நான் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**7** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கிருஷ்ணமூர்த்தி இறப்பதற்கு முந்தைய நாள், நானும், பிரவீனும் நடந்து வரவில்லை. போலீசார் விசாரணையில், அண்ணாநகர் கறிக்கடை அருகே நானும், பிரவீன்குமாரும் "நடந்து வந்தபோது " எனக்கு தெரிந்த எதிரிகள் இருந்தனர் என கூறவில்லை. கடந்த விசாரணையில் பிரவீன்குமார் இருசக்கர வாகனகத்தில் சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அதை அனுசரித்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இளநீர் கடையிலிருந்து சின்னாண்டாங்கோவில் செல்வதற்கு எல்ஜிபி நகர் மெயின்ரோடு வழியாக வழக்கமாக செல்வோம். அண்ணாநகர் கறிக்கடை எல்ஜிபி நகர் மெயின்ரோட்டிலிருந்து மூன்று ரோடுகள் தள்ளி உள்ளது. அண்ணாநகர் கறிக்கடை என்பது திறந்தவெளி. அதை சுற்றி வீடுகளும், இரண்டு பக்கம் வீடுகளும் உள்ளது. நான் சொன்னபடி 7ம் எதிரி உட்பட எந்த எதிரிகளும் அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. இன்றைய தினம் போலீசார் எனக்கு அடையாளம் காட்டி, அதன் அடிப்படையில் நான் நீதிமன்றத்தில் எதிரிகளை அடையாளப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

<u>**10, 11** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>மறு விசாரணை</u>

என் பெயர் கார்த்திக். எனது அப்பா பெயர் நாகராஜ். நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வருகிறேன்.

<u>**2, 6, 8, 9** மற்றும் **12** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை நீதிமன்ற அனுமதியுடன்</u>

கார்த்திக், த/பெ. நாகராஜன், சின்னாண்டாங்கோவில் என்பவர் வேறு நபர் என்றும், அதனால்தான் நான் கடந்த விசாரணையில் சாட்சியம்அளிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-11** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : அஜீத்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 17th day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

எதிரிகள் தரப்பு வேண்டுகோளின்படி**,** எதிரிகள் அவர்கள் விருப்பப்படி வரிசை மாறி அமர வைக்கப்பட்டுள்ளனர்**.**

<u>முதல் விசாரணை</u>

நான் அண்ணாநகரில் வசித்து வந்த, ஏசி மெக்கானிக்காக வேலை செய்கிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்தபோன கிருஷ்ணமூர்த்தி என்பவரை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவ சமயத்தில் நான் திருப்பூரில் வேலை பார்த்து வந்தேன். நான் சனிக்கிழமை இரவு திருப்பூரிலிருந்து ...

கரூருக்கு வருவேன், ஞாயிற்றுக்கிழமை கரூரில் இருந்துவிட்டு, திங்கள்கிழமை திருப்பூருக்கு சென்றுவிடுவேன். கிருஷ்ணமூர்த்தி இறப்பதற்கு முதல்நாள் இரவு நான் வீட்டில் இருந்தேன். என் வீட்டிற்கு கீழ் அன்றைய தினம் இரவு சண்டை எதுவும் நடக்கவில்லை. பேசிக்கொண்டிருந்தார்கள். நிறைய பேர் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அதில் கிருஷ்ணமூர்த்தி இருந்தாரா என்று எனக்கு தெரியாது. அங்கு 40, 50 பேர் இருந்தார்கள். அதில் சபரி, தாமஸ் எடிசன், குருராஜ் ஆகியோர் இருந்தனர். கோகுல், கலைச்செல்வன், கேசவன், பிரேம் ஆகியோர் இருந்தனரா என்று எனக்கு தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

கோகுல், கேசவன், கலைச்செல்வன், பிரேம்குமார் ஆகியோர்களில் எனக்கு கலைச்செல்வனை மட்டும் தெரியும். அவர் என் பகுதியை சேர்ந்தவரல்ல. மற்றவர்களை எனக்கு தெரியாது. 17.09.2020 அன்று இரவு 8.45 மணியளவில் நானும், பிரேம், கேசவன், கலைச்செல்வன், கோகுல் ஆகியோர் என் வீட்டிற்கு கீழே இருந்தோம் என்றும், அப்போது கோகுலுக்கும், கிருஷ்ணமூர்த்திக்கும் வாய்தகராறு" ஏற்பட்டு, கிருஷ்ணமூர்த்தி பிரேம்குமாரை அடித்துவிட்டார் என்றும், பிரேமுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதால், அவரை கோகுலும், மற்றவர்களும் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள் என்றும், என்னை என் அம்மா வீட்டிற்கு அழைத்துச்சென்றார் என்றும், மறுநாள் 18.09.2020 காலை 6.30 மணிக்கு நானும், என் நண்பர் தனபாலும் திருப்பூருக்கு வேலைக்கு சென்றோம் என்றும் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றும் சொன்னால் சரியல்ல. காலை 10.00 மணிக்கு நான் திருப்பூரில் வேலையில் இருந்தபோது, கேசவன் என்பவரின் போன் எண்ணிலிருந்து SI அழகுராம் என்பவர் போன் செய்தார். அதன்பிறகு நான் கரூருக்கு வந்தேன். போலீசார் விசாரித்தபோது, முதல்நாள் நடந்த சம்பவத்தை சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் நண்பர்கள் என்றும், தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக உண்மைக்கு புறம்பாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 2ம் எதிரியாக என்னை சேர்த்திருந்தனர். இவ்வழக்கிலிருந்து என்னை போலீசார் விடுவித்தவுடன், தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஏசி மெக்கானிக்காக திருப்பூரில் வேலை பார்க்கிறேன். காவல் உதவி ஆய்வாளர் அழகுராம் அழைக்கவில்லை என்றால் நான் கரூருக்கு வந்திருக்க மாட்டேன். அப்போது முழு அடைப்பு இருந்ததால் ஒரு மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு செல்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவரிடம் அனுமதி பெற்று வரவேண்டும். நான் பொதுமுடக்கத்திற்கு முன்பிருந்தே திருப்பூரில் வேலை பார்த்து வருகிறேன். முக்கிய காரணம் இல்லாமல் வெளியூர் செல்வதற்கு அனுமதி கொடுக்க மாட்டார்கள். காவல்துறையினர் என்னை அழைக்கிறார்கள் என அனுமதி பெற்றேன் என்றால் இல்லை. நான் இருசக்கர வாகனத்தில் செக்போஸ்டை சுற்றி வந்தேன். நான் வந்த அன்றைய தினமே போலீசார் என்னை விசாரித்தனர். சம்பவத்தன்று நான் கரூரில் இல்லை என்பதால் போலீசார் என்னை வழக்கிலிருந்து விடுவித்தனர். நான் திருப்பூரில் வேலை பார்ப்பதால், பொதுமுடக்கம் என்பதால் சம்பவத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்பிலிருந்தே கரூரில் நான் இல்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் அழகுராம் அழைத்ததின் பேரில்தான் நான் கரூருக்கு வந்தேன் என்றால் சரியல்ல. போலீசாருக்கு பயந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில், நான் வீட்டின் மாடியில் இருந்தேன் என்றும், கீழே கும்பலாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் போலீசார் எழுதி வைத்திருந்தார்கள்.

<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

<u>மறு விசாரணை</u>

சம்பவம் நடந்த 18.09.2020 அன்று காலை 6.30 மணிக்கு நானும், தனபாலும் பேருந்தில் திருப்பூருக்கு சென்றோம். பேருந்து டிக்கெட்டை போலீசாரிடம் ஒப்படைத்தேன்.

<u>**1** முதல் **4** எதிரிகள் தரப்பில் மறுகுறுக்கு விசாரணை நீதிமன்ற அனுமதியுடன்</u>

நான் சொன்னபடி செப்டம்பர் 2020 ல் பேருந்து போக்குவரத்து கிடையாது என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து, பேருந்தில் சென்றேன் என பொய்யாக சாட்சியம் ...

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசாரிடம் டிக்கெட்டை ஆஜர்படுத்தினேன் என உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-12** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : தனபால் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 17th day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

எதிரிகள் தரப்பு வேண்டுகோளின்படி**,** எதிரிகள் அவர்கள் விருப்பப்படி வரிசை மாறி அமர வைக்கப்பட்டுள்ளனர்**.**

முதல் விசாரணை

நான் ராமானுஜம் நகரில் வசித்து வந்து, தற்போது படித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் ஏசி மெக்கானிக்காக திருப்பூரில் வேலை பார்த்தேன். அ.சா.11 அஜீத்குமாரை எனக்கு தெரியும். நானும், அவரும் ஒன்றாக வேலை பார்த்தோம். கடந்த 18.09.2020 அன்று காலை 6.30 மணிக்கு நானும், அ.சா.11 ம் திருப்பூருக்கு பேருந்தில் சென்றோம். ….

நாங்கள் திருப்பூர் சென்றபிறகு, அஜீத் போனுக்கு போன் வந்தது. அதன்பிறகு, அன்றைய தினம் இரவு நானும், அஜீத்-ம் திருப்பூரிலிருந்து கிளம்பி கரூர் வந்தோம். கரூர் வந்தவுடன் அஜீத் தனியாக சென்றுவிட்டார், நான் தனியாக சென்றேன். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தனர். எங்களிடமிருந்து போலீசார் பஸ் டிக்கெட்டை வாங்கினார்கள்.

**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது இளங்கலை வணிகவியல் படித்து வருகிறேன். ஏசி பழுதுபார்ப்பது தொழில்நுட்பம் சம்மந்தப்பட்டது. நான் ஹெல்ப்பர் ஆக வேலை பார்த்தேன். நான் திருப்பூரில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை எந்த நிறுவனத்தில், என்ன வேலை பார்த்தேன் என்பதற்கான ஆவணத்தை போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை. சம்பவ சமயத்தில் பொதுமுடக்கம் இருந்த விவரம் எனக்கு தெரியும். நான் இளங்கலை வணிகவியல் 3 ம் வருடம் தற்போது படித்து வருகிறேன். எனக்கு 22 வயது. 2020 ம் வருடம் முதலாம் ஆண்டு படித்தேன் என்றால் 2021 ம் வருடம் நான் கல்லூரியில் சேர்ந்தேன். பொதுமுடக்கம் சமயத்தில் நான் கரூரில் வீட்டில் இருந்தேன் என்றும், நான் சொன்னபடி நான் திருப்பூரில் வேலை பார்க்கவில்லை என்றும், 18.09.2020 அன்று கரூரிலிருந்து திருப்பூருக்கு பேருந்தில் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் பேருந்து போக்குவரத்து ரத்து செய்யப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. அ.சா.11 அஜீத்-ஐ இவ்வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக போலீசார் முடிவு செய்து, என்னை சாட்சியாக சேர்த்துள்ளனர் என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-13** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சசிதரண் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 17th day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

எதிரிகள் தரப்பு வேண்டுகோளின்படி**,** எதிரிகள் அவர்கள் விருப்பப்படி வரிசை மாறி அமர வைக்கப்பட்டுள்ளனர்**.**

முதல் விசாரணை

நான் சத்யா நகர், காங்கேயம், திருப்பூரில் வசித்து வந்து, Cool N Cool என்ற பெயரில் ஏசி சர்வீஸ் சென்டர் நடத்தி வருகிறேன். அ.சா.11, அ.சா.12 சாட்சிகள் எனக்கு தெரியும். அவர்கள் என்னிடம் வேலை பார்த்து வந்தனர். கடந்த 18.09.2020 அன்று அ.சா.11, 12 சாட்சிகள் காலை நேரத்தில் வேலைக்கு வந்தனர். நேரம் எனக்கு …..

ஞாபகமில்லை. அவர்கள் இருவரும் அன்றைய தினம் காங்கேயம் ரோடு, காண்வெண்ட் பேருந்து நிறுத்தத்தில் நின்றுக்கொண்டிருந்தார்கள், அவர்களை நான் எனது இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு, அவினாசியில் உள்ள எனது அலுவலகத்திற்கு பஸ் ஏற்றி அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். அ.சா.11, 12 சாட்சிகளை அழைக்க வந்த பேருந்து நிறுத்தத்தின் அருகில் இருந்த வீடியோ பதிவுகளை கோழிக்கடையிலிருந்து எடுத்துக்கொடுத்தேன். அவர்கள் அன்றைய தினம் பேருந்தில் வந்தனர்.

<u>**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நிறுவனம் நடத்துவதற்கு என்னென்ன உரிமம் வாங்க வேண்டும் என்பது எனக்கு தெரியும். என்னிடம் பணியாற்றும் பணியாளர்களின் பணி சம்மந்தமாக லாக் புக் பராமரிக்க வேண்டும். அந்த லாக்புக்கில் யார், யார் என்னிடம் வேலை பார்த்தார்கள், எந்த வாடிக்கையாளருக்கு என்ன சர்வீஸ் செய்தார்கள் என்ற விவரம் துலங்கும். 24.03.2020 ல் மத்திய அரசாங்கம் பொதுமுடக்கம் அறிவித்த விவரம் எனக்கு தெரியும். அப்போது மாநகர், புறநகர் பேருந்துகள் முற்றிலும் தடை செய்யப்பட்டிருந்தது. பொதுமுடக்கம் தளர்க்கப்படும்வரை எந்த நிறுவனங்களும் இயங்கவில்லை. போலீசார் விசாரணையின்போது, 18.09.2020 அன்று என்னிடம் யார், யார் வேலை பார்த்தனர், எந்த வாடிக்கையாளருக்கு, என்ன சர்வீஸ் செய்தனர் என்ற லாக் புக்கை நான் கொடுக்கவில்லை என்றால் போலீசார் என்னிடம் கேட்கவில்லை, அதனால் நான் கொடுக்கவில்லை. காங்கேயம் ரோட்டிலிருந்து அவினாசிக்கு அ.சா.11, 12 சாட்சிகளை நான் அனுப்பி வைத்த விவரத்தை போலீசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் அவர்கள் கேட்காததால் நான் சொல்லவில்லை. அ.சா.11, 12 சாட்சிகள் என்னிடம் வேலை பார்த்தனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு போலீசார் என்னை விசாரித்தனர். அ.சா.11, 12 சாட்சிகள் என்னிடம் அன்றைய தினம் வேலை பார்க்கவில்லை என்றும், அதன்காரணமாகத்தான் அன்றைய தினம் அவர்கள் என்னிடம் வேலை பார்த்ததற்கான ஆவணங்களை நான் ஒப்படைத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. Cool N Cool என்ற நிறுவனத்தின் உரிமையாளர் நான் என்பதற்காக ஆவணத்தையும் நான் ஒப்படைக்கவில்லை. மேற்படி நிறுவனத்தை நான் நடத்தவில்லை என்றும், அதில் அ.சா.11, 12 சாட்சிகள் பணிபுரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கண்காணிப்பு கேமராவில் எவ்வாறு பதிவு செய்யப்படும் என்ற விவரம் எனக்கு தெரியாது.

கண்காணிப்பு கேமரா பதிவை நான் ஒப்படைக்கவில்லை. போலீசார் வந்து, அந்த பதிவை கேட்டு வாங்கிக்கொண்டார்கள். முதல் விசாரணையில் போலீசாரிடம் கண்காணிப்பு பதிவுகளை கொடுத்தேன் என சொல்லிக்கொடுத்து, சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல.

<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

<u>மறு விசாரணை</u>

போலீசார் கண்காணிப்பு கேமரா பதிவுகளை கோழிக்கடையிலிருந்து பெறும்போது நான் உடனிருந்தேன்.

<u>**1** முதல் **4** எதிரிகள் தரப்பில் மறுகுறுக்கு விசாரணை நீதிமன்ற அனுமதியுடன்</u>

போலீசார் கண்காணிப்பு கேமரா பதிவுகளை கோழிக்கடையிலிருந்து பெறும்போது நான் உடனிருந்தேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் அந்த விவரம் போலீசாருக்கு தெரியும். கோழிக்கடைக்காரரையும் போலீசார் விசாரித்தார்கள். கோழிக்கடைக்காரர் சொன்னதை போலீசார் எழுதிக்கொண்டார்களா என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் கோழிக்கடை இல்லை என்றும், அவர்களை போலீசார் விசாரித்து கண்காணிப்பு கேமரா பதிவுகளை பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-14** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவசண்முகம் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 17th day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

எதிரிகள் தரப்பு வேண்டுகோளின்படி**,** எதிரிகள் அவர்கள் விருப்பப்படி வரிசை மாறி அமர வைக்கப்பட்டுள்ளனர்**.**

<u>முதல் விசாரணை</u>

நான் கரூர், சின்னாண்டாங்கோவில் காந்திநகரில் வசித்து வந்து இரும்பு வியாபாரம் செய்கிறேன். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். என் மகன் பெயர் கலைச்செல்வன். என் மகனிடம் செல்போன் உள்ளது. அதன் எண். 9943055308 ஆகும். அந்த செல்போன் என் பெயரில் உள்ளது. அதை என் மகன் பயன்படுத்தி வந்தார்.

**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் மகனுக்கு நான் தனியாக செல்போன் மற்றும் இணைப்பு எண் வாங்கி கொடுக்கவில்லை. மேற்சொன்ன என் பெயரில் உள்ள செல்போனை நானும், என் மகனும் பயன்படுத்துவோம். என் மகன் படித்துக்கொண்டிருந்தார். கல்லூரிக்கு செல்லும்போது செல்போனை கொண்டு செல்லக்கூடாது. கல்லூரி செல்லும்போது என் மகன் செல்போன் கொண்டு செல்ல மாட்டார். லாக்டவுன் சமயத்தில் எல்லோரும் வீட்டில்தான் இருந்தோம். என் வீட்டில் மேற்சொன்ன செல்போனை தவிர வேறு செல்போன் கிடையாது. காவல்துறையினர் மிரட்டி என்னை சாட்சியம் அளிக்க சொன்னதால், என் மகன் எனது செல்போனை பயன்படுத்தினார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 6, 8, 9** மற்றும் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்சொன்ன செல்போனை நான்தான் பயன்படுத்தினேன் என்றால் நானும், என் மகனும் பயன்படுத்துவோம். மேற்சொன்ன செல்போனை நான் மட்டும்தான் பயன்படுத்துவேன் என்றும், என் மகன் பயன்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்து, என் மகன் மேற்படி செல்போனை பயன்படுத்தினார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**11** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-15** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 17th day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

எதிரிகள் தரப்பு வேண்டுகோளின்படி**,** எதிரிகள் அவர்கள் விருப்பப்படி வரிசை மாறி அமர வைக்கப்பட்டுள்ளனர்**.**

முதல் விசாரணை

நான் பஞ்சமாதேவி காளிப்பாளையத்தில் வசித்து வந்து, டிரைவராக வேலை பார்க்கிறேன். நான் சின்னாண்டாங்கோவிலில் உள்ள கணேசன் என்பவரது இரும்பு கடையில் வேலை பார்த்து வருகிறேன். எனது பெயரில் இரண்டு சிம்கார்டுகள் வாங்கியுள்ளேன். அதன் எண்கள். 9952125847 என்ற எண்ணை நான் பயன்படுத்தி ...

வருகிறேன். மற்றொரு எண் உள்ள என் உரிமையாளரின் தம்பி மகனுக்கு வாங்கி கொடுத்தேன். அவர் பெயர் செந்திலீஸ்வரன். அவரை என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர் நீதிமன்ற ஆஜரில் இடமிருந்து வலமாக உள்ள மூன்றாவது நபர். (நீதிமன்ற ஆஜரில் *3* வதாக இருப்பவர் *10* ம் எதிரி செந்திலீஸ்வரன் ஆவார்*)* நான் அவருக்கு 7 வருடத்திற்கு முன்பு சிம்கார்டு வாங்கிக்கொடுத்தேன். அப்போது அவருக்கு 18 வயது பூர்த்தியடையாத காரணத்தினால் எனது ஓட்டுநர் உரிமத்தின் நகல் கொடுத்து சிம்கார்டு வாங்கிக்கொடுத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

<u>**10** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் எந்த தேதியில், எந்த நிறுவனத்தின் சிம்கார்டு வாங்கினேன் என்பதற்கு ஆவணத்தை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. செந்திலீஸ்வரனின் பெரியப்பா கடையில் வேலை பார்த்து வந்தேன் என்பதற்கு போலீசாரிடம் நான் ஆவணம் கொடுக்கவில்லை. இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியை எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்ன செல்போன் எண் நான் பயன்படுத்தி வரும் செல்போன் எண் ஆகும். செந்திலீஸ்வரனுக்கு அவர் அப்பா போன் வாங்கிக்கொடுப்பார் என்றும், நான் வாங்கிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னால் அவர் உடன் நான் சென்றேன். செல்போன் சிம்கார்டு வாங்குவதற்கு எனது ஓட்டுநர் உரிமத்தின் நகல் கொடுத்தேன். செந்திலீஸ்வரன் பயன்படுத்திய செல்போனை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. ,அதை கைப்பற்றியதால்தான் என்னை விசாரித்தார்கள். செந்திலீஸ்வரன் என் பெயரில் உள்ள சிம்கார்டை பயன்படுத்தவில்லை என்றும், என் பெயரில் அந்த சிம்கார்டு உள்ளதால், என்னை காப்பாற்றிக்கொள்வதற்காக போலீசார் சொல்லிக்கொடுத்தபடி செந்திலீஸ்வரன் என் சிம்கார்டை பயன்படுத்திவருகிறார் என சொன்னேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்தபோது, எனது ஓட்டுநர் உரிமத்தை கொடுத்தேனா என்றால் காண்பித்தேன். கொடுக்கவில்லை. எனக்கு 37 வயது. எனக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றும், நான் செந்திலீஸ்வரன் பெரியப்பாவிடம் வேலை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்காக செந்திலீஸ்வரன் பெரியப்பாவிடம் நான் வேலை பார்த்ததாக ஜோடனை செய்துள்ளனர் என்றும்,அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-16** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : கவிதா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 17th day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

எதிரிகள் தரப்பு வேண்டுகோளின்படி**,** எதிரிகள் அவர்கள் விருப்பப்படி வரிசை மாறி அமர வைக்கப்பட்டுள்ளனர்**.**

<u>முதல் விசாரணை</u>

நான் தாந்தோணிமலை வடக்குத்தெருவில் வசித்து வந்து, தற்போது அரசு கலைக்கல்லூரி, சத்தியமூர்த்தி நகர், 4 வது தெருவில் வசித்து வருகிறேன். நான் இரண்டு சிம்கார்டுகள் வாங்கியுள்ளேன். அதன் எண் எனக்கு ஞாபகமில்லை. நான் டெக்ஸில் வேலை பார்த்து வருகிறேன். எனது வேலை பணிக்காக ஒரு சிம்கார்டை பயன்படுத்தி

வருகிறேன். மற்றொரு சிம்கார்டை எனது பிள்ளைகள் பயன்படுத்துவதற்காக கொடுத்துள்ளேன். எனது அடையாள அட்டையை கொடுத்து வேறு யாருக்கும் நான் சிம்கார்டு வாங்கி கொடுக்கவில்லை. எனக்கு பிரேம்குமார் என்பவரை தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

நான் தாந்தோணிமலை வடக்குத்தெருவில் குடியிருந்த வீட்டிற்கு மாடியில் எதிரி பிரேம்குமார் வசித்து வந்தார் என்றால் தெரியாது. எனது அடையாள அட்டையை கொடுத்து, ஏர்டெல் நிறுவனத்திலிருந்து சிம்கார்டு எண். 9384246805 என்ற எண்ணுள்ள சிம்கார்டை பெற்று, பிரேம்குமாரிடம் கொடுத்துள்ளேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதித்துறை நடுவரிடம் நான் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்தாகும். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. நீதித்துறை நடுவர் முன்பாக நான் " நான் குடியிருந்த வீட்டின் மாடியில் பிரேம்குமார் வசித்து வந்தார் அவருக்கு உள்ளூர் முகவரி இல்லாததால் என் பெயரில் நான் அவருக்கு ஏர்டெல் சிம்கார்டு வாங்கிக்கொடுத்தேன், அந்த சிம்கார்டு எண். 9384246805 ஆகும். எனது பெயரில் உள்ள சிம்கார்டை கடந்த இரண்டு வருடங்களாக பிரேம்குமார்தான் பயன்படுத்தினார்" என்று சொன்னேன். தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரேம்குமாரை தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**2, 6, 8, 9** மற்றும் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தை நான் போலீசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் அளிப்பதற்கு நான் நீதிமன்றம் சென்றதில்லை. நீதித்துறை நடுவரிடம் அழைத்து சென்ற போலீசார் சொல்லிக்கொடுத்தபடி நான் வாக்குமூலம் அளித்தேன்.

<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.